1981 ஏப்ரல் 4]

மணலி தாய்-சேய் நல விடுதி

வினா எண். 607— திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) மணலி தாய்-சேய் நல விடுதியில் மருத்துவ வசதி இருக்கிறதா ?

(ஆ) இல்லையெனில் அந்த விடுதியை தேவையான வசதி களுடன் இயங்கவைக்க முயற்சி உண்டா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

டென்மார்க் அரசு உதவியுடன் தாய் சேய் நலத்தை மேம்படுத்தும் திட்டம்.

* வினா எண். 608 திரு. செம்மலை : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டென்மார்க் அரசின் உதவியுடன் தாய் சேய் நலத்தை மேம்படுத்தும் மக்கள் நலவாழ்வுத் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் என்ன ?

(இ) இத்திட்டம் எத்தனை மாவட்டங்களில் செயல்படு கின்றது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ), (ஆ) மற்றும் (இ) ஆம். ஒரு திட்ட செயற்குறிப்பு டென்மார்க் அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, இந்த டேனிட்டா திட்டம் எவ்வளவு காலத்திற்கு அங்கே செயல்படுத்தப்பட உள்ளது என்ற விவரத்தையும் இந்த திட்டத்திற்கான டென்மார்க் அரசு எந்த அளவுக்கு உதவித் தொகை வழங்கி இருகின்றது என்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர் களே, டேனிஷ் இன்டர்நேஷனல் டெவலப்மென்ட் ஏஜென்சி அதாவது டேனியா எகபது அவர்களால் நடத்தப்படுகின்ற ஒரு திட்டம், 5 ஆண்டுகளுக்கு சேர்த்து ஏற்படுத்தப்பட்ட

திட்டம். ஒவ்வொரு ஆண்டுக்கும் குறிப்பிட்ட தொகை என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். முதல் ஆண்டு 2 கோடியே 25 இலட்சம். அடுத்த ஆண்டு 3 கோடியே 56 இலட்சம். மூன்றாவது ஆண்டு 3 கோடியே 69 லட்சம், 4வது ஆண்டு 2 கோடியே 13 லட்சம்; 5-வது ஆண்டு, 2 கோடியே 10 லட்சம். ஆக மொத்தம் 13 கோடியே 76 லட்சம் இதற்கென போடப் பட்ட திட்டமாகும். இந்தத் திட்டம் இப்போது பைனல் ஸ்டேஜில் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. அதைப் பார்த்து டேனிஷ் கவர்ன்மென்ட் ஒப்புதல் கொடுத்த பிறகு அது செயல்படுத்தப்படும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டென்மார்க் அரசின் உதவியோடு தாய்-சேய் நலத்தை மேம்படுத்தும் திட்டம் உள்ளது போன்று, ஏனைய வெளிநாடுகளின் உதவி வேறு ஏதாவது இந்த தாய்-சேய் நல மேம்பாட்டிற்காக இருக்கிறதா ? அப்படி இருந்தால் அந்த நாடுகள் எவை என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

மாவட்டந்தோறும் தனித்தனி போக்குவரத்து கழகங்கள் அமைக்கும் திட்டம்

*வினா எண். 643—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்தனியாக போக்கு வரத்துக் கழகம் அமைக்கும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) பேருந்துகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவைப்பட்டால் ஒவ்வொரு மாவட்டத்திலும், தனித்தனி போக்குவரத்துக் கழகங்களை அமைக்கலாம் என்ற பரிந்துரையை கொள்கையளவில் அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதன் பேரில் மேற்கொண்டு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ள தந்தை பெரியார் போக்குவரத்துக்கழகத்தால், மிகப் பெரிய அளவிலான நிர்வாகத்தை நடத்த மிகவும் சிரமப்படுவதால், அதை இரண் டாகப் பிரித்து, வட ஆற்காடு மாவட்டத்திற்கு ஒன்றும்; தென் னாற்காடு மாவட்டத்திற்கு ஒன்றுமாகப் பிரித்து, வேலூரை